20

ed by the Madras Text-Book Committee for Class use.

இளங்கோ வாசகம்

இரண்டாம் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 OCT 1942
MADRAS

வித்துவான்
மா. இராசமாணிக்கம்

20



V. K. அருணாசலம்
தெப்பக்குளம் :: திருச்சி.

எம் சொந்தப் பிரசுரங்கள்

	ரூ.	அ.	பை.
1. இளங்கோ வாசகம், முதற் புத்தகம் ...	0	2	6
2. ,, இரண்டாம் புத்தகம் ...	0	3	0
3. ,, மூன்றாம் புத்தகம் ...	0	4	0
4. ,, நான்காம் புத்தகம் ...	0	5	0
5. ,, ஐந்தாம் புத்தகம் ...	0	6	0
6. இளங்கோ தமிழ் இலக்கணம் ... (ஐந்தாம் வகுப்புக்குரியது)	0	2	6
7. இளங்கோ எண்சுவடி வாய்பாடு...	0	1	0
8. புதுமுறை பூகோள சாஸ்திரம் சென்னை இராஜதானி (இது மிகவும் புதிய முறையில் எழுதப் பட்டது. ஐந்தாம் வகுப்புக்குரியது) ...	0	8	0
9. இந்திய தேச சரித்திரக் கதைகள் ஐந்தாம் வகுப்புக்குரியது ...	0	5	0

V. K. அருணாசலம், தெப்பக்குளம், திருச்சி.

இளங்கோ வாசகம்

இரண்டாம் புத்தகம்

494.81186

வித்துவான்

மா. இராசமாணிக்கம் B.O.L.

தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர்தரக் கலாசாலை,

சென்னை.

901

பிரசுர கர்த்தா :

V. K. அருணாசலம்

தெப்பக்குளம் : : திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை] 1941 [விலை அணா 3

First Edition	1936
Revised	1937
Rgprinted	1938
Reprinted	1939
Reprinted	1940
Reprinted	1941

931,9

Approved by the Text-Book Committee, Madras.

(Vide Fort St. George Gazette, Part I-B, Educational List, Page No. 212, dated 10-5-1938).

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 OCT 1942
MADRAS

முகவுரை

இளங்கோ வாசகம்—இரண்டாம் புத்தகம் என்னும் பெயரோடு மிளிரும் இச்சிறு நூல், இக்கால இளஞ் சிறுர் மனநிலைக்கு ஏற்றவாறு நவீன பாடங்களை எளிய நடையில் இயம்புவதாகும். இந்நூல் தமிழ்ப் பெருங்காவியமாக '**சிலப்பதிகாரம்**' செய்தருளிய சேர முனிவர் **இளங்கோ அடிகள்** பெயர் கொண்டது. இந் நூலை மாணவ உலகம் வரவேற்கும் என்னுந் துணி புடையேன்.

அன்பன்,

மா. இராசமாணிக்கம்.

கடின பதங்களுக்குப் பொருள்

பக்கம்

6 விரும்பி - ஆசைப்பட்டு.

9 உழத்தி - உழவன் மனைவி.

14 கம்மியன் - தட்டான், தமிழ் நாட்டில் காணும் பொங்கல் அன்று சிறு பெண்கள் கடைகள் தோறும் வீடுகள் தோறும் சென்று கும்மி அடித்துக் காசு வாங்குதல் வழக்கம்.

,, அம்மான் - தாயோடு பிறந்தவன்.

,, குதிரை ஊர்வது - குதிரைச் சவாரி செய்தல் ; இது பிறநாட்டுப் பெண்டிற் பலர் கையாளும் பழக்கம்.

16 சாலவும் - மிகவும்.

17 இறைவன் - கடவுள்.

இளங்கோ வாசகம்

:o:

இரண்டாம் புத்தகம்



1. படிப்பு

1. கண்ணன் எனது அண்ணன் ஆவான்.
2. கண்ணன் கருத்தாய்ப் பாடம் படிப்பான்.
3. கண்மணி என்பது எனது பெயராம்.
4. கண்மணி நானும் கருத்தாய்ப் படிப்பேன்.
5. கண்ணன் என்னைக் 'கண்மணி!' என்பான்.
6. கண்ணனை நானோ 'அண்ணா!' என்பேன்.
7. கண்ணனும் நானும் காலையில் எழுவோம்.
8. கண்ணனும் நானும் கடவுளைத் தொழுவோம்.



2. விசாரித்தல்

1. ஆயாள்! ஆயாள்! அமருங்கள்.
2. அன்பாய் க்ஷேமம் கூறுங்கள்.
3. காந்தாமணி என்ன செய்கிருள்?
4. கண்ணுமணி என் செய்கின்ருள்?
5. சுந்தரம் நன்ருய்ப் படிப்பாஞ?
6. சுந்தரி நன்ருய்ப் படிப்பாளா?
7. அப்பா **வெளியே** போய்விட்டார்.
8. அம்மா **உள்ளே** இருக்கின்ருர்.



3. மாமரம்

1. மரத்தின் பெயரோ, மாமரம் ஆகும்.
2. மரத்தின் **மேலே** இருப்பவன் முருகன்.
3. மரத்தின் **கீழே** இருப்பவள் மங்கை.
4. மங்கை முருகன் தங்கை ஆவாள்.
5. மாங்கன்றைப் பார் மரத்தின் **அருகில்.**
6. மாங்கன்றே பின் மாமரம் ஆகும்.
7, மாவடுவே பின் மாங்காய் ஆகும்.
8. மாதாவைக் காட்டிலும் மாங்காய் ஊட்டும்.



4. கப்பல்

1. கப்பல் என்பது கடலில் போவது.
2. கப்பலில் எனது அப்பா வந்தார்.
3. கப்பல் ஒன்றை நாமே செய்வோம்.
4. காகிதக் கப்பல்! காகிதக் கப்பல்!
5. பெரிய கப்பலைப் பெரியோர் செய்வார்.
6. சிறிய கப்பலை நாமே செய்வோம்.
7. எனது கப்பல் கத்திக் கப்பல்.
8. உனது கப்பல் ஒற்றைக் கப்பல்.

5. விளையாட்டு

1. ஆடிடுவோம் நாம் கால் பந்து ;
ஆடுவோம் ஆடுவோம் ஆடுவோம்.

2. மாலையில் ஓட்டமும் விளையாட்டும்
மகிழ்ச்சியைத் தந்திடும் பெருவிருந்தாம்.

3. இரத்த ஓட்டம் பெருகிடுமே ;
இரவில் தூக்கம் வந்திடுமே.

4. சோம்பல் நமைவிட் டோடிடுமே ;
சுறுசுறுப் பென்பது தோன்றிடுமே.

5, பயம்முத லாயின பறந்திடுமே ;
பலமும் அழகும் வளர்ந்திடுமே.



6. பாலம்

1. பாலத்தைப் பார் ! பாலத்தைப் பார் ?

2. பாலம் பார்க்கக் காலம் வந்தது.

3. பாலம்மாளும் பாலம் பார்த்தாள்.

4. வேலம்மாளும் விரும்பிப் பார்த்தாள்.

5. பாலத்தின் **மேல்** ஓடுவது என்ன ?

6. பாலத்தின் **கீழ்** ஓடுவது என்ன ?

7. இரும்புப் பாலம் கெட்டிப் பாலம்.

8. விரும்புவாயோ இரும்புப் பாலம் ?



7. ரோஜாப்பூ

1. ராஜாமணி நான் ரோஜா பறித்தேன்.

2. ராஜாமணிக்கு ரோஜா வேண்டும்.

3. கூடை இருப்பது மேடை மேலே.

4. கூடையில் இருப்பவை ரோஜாப் பூக்கள்.

5. ராஜா பார்த்தார் ரோஜாப் பூவை.

6. ராஜா அழைத்தார் ஆஜர் ஆனேன்.

7. ராஜா கேட்டார் ரோஜாப் பூவை.

8. ராஜா வேண்டுமா? ரோஜா வேண்டுமா?



8. திசைகள்

1. சூரியன் வருவது கிழக்குத் திசையாம்.
2. சூரியன் போவது மேற்குத் திசையாம்.
3. சூரியனுக்கு எதிர் நிற்கிறேன், பார்.
4. வலக்கைப் பக்கம் தெற்குத் திசையாம்.
5. இடக்கைப் பக்கம் வடக்குத் திசையாம்.
6. காலையில் சூரியன் தோன்றுவதைப் பார்.
7. மாலையில் சூரியன் மறைவதைப் பார்.
8. சூரியன் பெரிய நெருப்பு உருண்டை.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 OCT 1942
MADRAS

9. கழனி

1. **உழவன்** கழனியை உழுகின்றான்.
2. **உழத்தி** கரைமேல் நிற்கின்றாள்.
3. உழவன் நன்றாய் உழைக்கின்றான்.
4. உழத்தியும் நன்றாய் உழைக்கின்றாள்.
5. நன்செய் நிலத்தை உழுகின்றான்.
6. புன்செய் நிலத்தை பின் உழுவான்.
7. நன்செய் நிலத்தில் நெல் விளையும்.
8. புன்செய் நிலத்தில் பஞ்சு விளையும்.

10. இரயில் வண்டி

1. நகர்வோம் இரயில் வண்டியைப்போல்
நாம்
நகர்வோம் நகர்வோம் நகர்வோமே.
2. கோபாலன்தான் இழுக்கும்வண்டி
கோகிலாம்பாள் காவல் வண்டி.
3. 'குப்-குப்' என்றே கூவிடுவோம்
'கூ-கூ' என்றே கூவிடுவோம்.
4. கமலம் தான்கை காட்டிமரம்
கண்ணன் தான்ரயில்வே ஸ்டேஷன்.
5. ஸ்டேஷனில் இரயிலும் நின்றிடுமே
ஸ்டேஷனில் தண்ணீர் குடித்திடுமே.
6. இராதே! வழியில் நில்லாதே
இரயில்தான் உன்மேல் ஏறிடுமே.

11. எறும்பு

1. எங்கும் எறும்பு! எங்கும் எறும்பு!

2. அங்கும் இங்கும் எங்கும் எறும்பு!

3. சங்கை எடுத்தேன், அங்கும் எறும்பு!

4. மங்கை படுத்தாள், அங்கும் எறும்பு!

5. எறும்பை இந்தக் கரும்பிலே பார்.

6. எறும்பு ஏன் அந்த இரும்பில் இல்லை?

7. எறும்பு எந்நேரமும் சுறுசுறுப்பு உள்ளது.

8. எறும்பைப் போல இருப்பாயோ நீ?



12. காக்கை

1. தங்காய் ! அந்தக் காக்கையைப் பார்.
2. காக்கை தடித்த மூக்கை உடையது.
3. காக்கை மூக்கால் கொத்தித் தின்னும்.
4. காக்கைக்கு இந்தச் சாதம் போடு.
5. காக்கை உடனே **கரையும்! கரையும்!**
6. காக்கைகள் பலவும் கூடிடும் பார்.
7. காக்கைகள் சாதம் கொத்தித் தின்னும்.
8. காக்கை என்றும் சேர்க்கை விரும்பும்.



13. ஆகாய விமானம்

1. கீழே பறப்பது காற்றாடி.
2. மேலே பறப்பதன் பெயர் என்ன ?
3. மேலே பறப்பது **பலூன்! பலூன்!**
4. ஓஹோ! இதுதான் பலூனா!
5. அதற்குமேல் ஒன்று பறப்பதைப் பார்.
6. அதன் பெயர் என்ன? அதன் பெயர் என்ன ?
7. அதன் பெயர் **ஆகாய விமானம்** என்பர்.
8. ஆஹா! அதுதான் எனக்கு வேண்டும்.



14. கும்மி

1. கும்மி அடிப்போம் கும்மி அடிப்போம்.
2. கம்மியன் முன்னே கும்மி அடிப்போம்.
3. அம்மணி வந்தாள் கும்மி அடித்தாள்.
4. அம்மான் மகளும் கும்மி அடித்தாள்.
5. கம்மலை அணிந்தவள் கும்மி அடிப்பாள்.
6. அம்மி பிடித்தவள் கும்மி அடிப்பாள்,
7. கும்மி அடிப்பதும் குதிரை ஊர்வதும்
   நம்மால் ஆகும்; நம்மால் ஆகும்.

15. என் வேலை

1. காலையிலே எழுந்திருந்தேன் ;
கடவுளை நான் தொழுதேன்;
காலைகடன் முடித்துக்கொண்டேன்;
களிப்புடனே குளித்தேன்.

2. வேறு உடை உடுத்துக்கொண்டேன்;
விருப்பமுடன் படித்தேன்;
மாறென்றும் பேசாமல் ;
வைத்த உணவை உண்டேன்.

3. பள்ளிக்கூடம் போயினேன்;
படித்த எல்லாம் சொன்னேன் ;
நல்லு பாத்தி யாயர் என்னை
'நல்லன்' எனச் சொன்ஞர்.

4. அச்செய்தியை அன்பாய் என்
அன்னையிடம் அறைந்தேன்.
மெச்சி என்னை அணைத்தவரும்
விரும்பிமுத்தம் அளித்தார்.



16. குருடனது நாய்

1. குருடன் நாயா? திருடன் நாயா ?
2. குருடன் நாய்தான்; காசு போடு.
3. காசைக்கொண்டு குருடன் பிழைப்பான்.
4. காசைச் சேர்த்து நாயே கொடுப்பது.
5. நாயின் அறிவை நாம் என் சொல்வோம்?
6. தாயினும் அன்பு சாலவும் உடையது.
7. நாயைப்போல் ஒரு நண்பன் வேண்டும்.
8. நாய்போல் பிறர்க்கு நாமும் உதவுவோம்.

17. கடவுளின் பிள்ளைகள்

1. தொப்பி அணிந்தவன் **வெள்ளை** நிறத்தான்.
2. சப்பை மூக்கன் **மஞ்சள்** நிறத்தான்.
3. அடுத்த நால்வரும் **கறுப்பு** நிறத்தார்.
4. பலபல நாட்டார் பலபல நிறத்தார்
5. பலபல பாஷை பேசும் மக்கள்.
6. ஆயினும் என்ன ? ஆயினும் என்ன ?
7. எல்லா நிறங்களும் இறைவன் நிறமே.
8. எல்லா மக்களும் இறைவன் மக்களே.

18. அடுக்குச் சொற்கள்

1. பால் **வெள்ளை வெளேர்** என்று இருக்கிறது.
2. இரத்தம் **செக்கச்செவேல்** என்று இருக்கும்.
3. பயிர் **பச்சைப்பசேல்** என்று தோன்றுகிறது.
4. பூக்கள் **கொத்துக்கொத்தாய்** மலர்கின்றன.
5. பிள்ளைகள் **வரிசைவரிசையாய்** நிற்கிறார்கள்.
6. நெருப்புத் **தகதக** என்று எரிகிறது.
7. வைரம் **பளபள** என்று மின்னுகிறது.
8. சிலர் **பன்னிப் பன்னிப்** பேசுவர்.
9. இராமன் **விழுந்து விழுந்து** சிரிக்கிறான்.
10. எறும்புகள் **சாரை சாரையாய்ப்** போகின்றன.

19. ஓட்டம்

1. நான் ஓடுகிறேன்.

2. நாம் ஓடுகிறோம்.

நாங்கள் ஓடுகிறோம்.

3. நீ ஓடுகிறாய்.

4. நீர் ஓடுகிறீர்.

நீங்கள் ஓடுகிறீர்கள்.

5. அவன் ஓடுகிறான்.

6. அவள் ஓடுகிறாள்.

7. அவர் ஓடுகிறார்.

அவர்கள் ஓடுகிறார்கள்

8. அது ஓடுகிறது.

9. அவை ஓடுகின்றன.

20. என் தாயார்

1. **எ**ன்னைக் கனிவாய்ப் பெற்றெடுத்தே
என்னை அன்பாய் வளர்த்தவர் என்
தாயார் அலவோ? அவர்பாதம்
தயங்கா மல்நான் வணங்கிடுவேன்.

2. **நா**ன் நோயற்ற போதெல்லாம்
தாமே பத்தியம் இருந்தவர் என்
தாயார் அலவோ? அவர் வார்த்தை
வேதம் எனநான் போற்றிடுவேன்.

3. **கொ**சுவும் ஈயும் மொய்க்காமல்
குணமாய் என்னைக் காத்தவர் என்
தாயார் அலவோ? அவர் வார்த்தை
தட்டாமல் நான் கேட்டிடுவேன்.

4. '**க**ண்ணே! இன்னும் உண்' என்றே
கனிவாய் உபசரித் திடுபவர் என்
தாயார் அலவோ? அவர்மனம்போல்
தயங்கா மல்நான் நடந்திடுவேன்.

5. **எ**ன்னைக் காணின் மனங்களித்துக்
'கண்ணே!' உயிரே! என்பவர் என்
தாயார் அலவோ? அவரினும் ஓர்
தெய்வம் உண்டோ புவிமீதில்.

6. **தா**யார் உயர்வைக் கண்டன்றோ
'தாயில் சிறந்த கோயில் இல்லை'
என்று மொழிந்தனர் பெரியோர்! ஆ!
தாயார் அன்பினை என் என்பேன்!



21. மோட்டார்

1. **நான் ஒரு மோட்டார்.** பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு போவதே என் வேலை. தம்பீ, நீ என் வழியைவிட்டு விலகி நில். நீ விலகாவிடின், நான் உன்மீது ஏறிவிடுவேன். நான் ஏறினால், நீ காயப்படுவாய். நான் அதைச் செய்ய விரும்பவில்லை.

2. **என்** சாரதி மிகவும் நல்லவன். அவன் உன்னைப் பார்க்கும்போதெல்லாம் ஹாரன் அடித்து ஓசை உண்டாக்குகிறான். ஹாரன் சத்தத்தைக் கேட்டு நீ வழி விலகிப் போக வேண்டும். நீ ஒருபோதும் என் வழியைக் கடக்க முயலாதே.

1. நீ என்னோடு வர விரும்புகிறாயா? உன் கையை நீட்டு. நான் நிற்பேன். நீ என் படிமீது ஏறி, என் மடிமீது உட்கார். நான் போகும் இடம் எங்கும் நீ போகலாம்; வழியில் பல காட்சிகளைக் கண்டுகொண்டே போகலாம்.

---

22. சூரியன்

1. ஆ! ஆ! ஆ! சூரியனே! உன்னைக் காண நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். நீ இருட்டை ஓட்டிவிட்டாய். உன்னைக் கண்ட உடனே பனித் துளிகள் மறைந்து விட்டன; நட்சத்திரங்கள் இருந்த இடம் தெரியவில்லை.

எங்கும் ஒரே வெளிச்சமாக இருக்கின்றன. நீ எவ்வளவு அழகாயும் உஷ்ணமாயும் இருக்கிருய்!

2. **நீ** இன்று வந்ததைப் போலவே தயவுசெய்து தினந்தோறும் வா; வந்து எங்களைப் பார். நீ வருவதால் எங்கள் தோட்டம் அழகாகக் காணப்படுகிறது. தோட்டத்தில் உள்ள மலர்கள் யாவும் உன்னை விரும்புகின்றன. பறவைகள் உன்னைக் கண்டு பாடுகின்றன. பூக்கள் உன் பக்கமாகத் திரும்பி உன்னை மகிழ்ச்சியோடு பார்க்கின்றன.

3. **மா**லை வேளையில் நீ படுக்கைக்குச் செல்கிருய்போலும்! நன்ருய்த் தூங்கு; காலையில் வந்து எங்களைப் பார்க்கத் தவருதே.



23. பல பொருள்கள்

1. **இந்தப் படத்தில் நீ என்னென்ன பொருள்களைப் பார்க்கிறாய்?** நான் ஓர் ஆற்றையும், ஒரு பாலத்தையும், ஒரு கோயிலையும், அதன் முன்புறம் ஒரு குளத்துப் படித்துறையையும், சில மனிதரையும் பார்க்கிறேன்.

2. **ஆற்றில் உள்ள படகுகள் எத்தனை?** ஆற்றில் நான்கு படகுகள் இருக்கின்றன.

3. **எல்லாப் படகுகளும் ஆற்றின் நடுவில் இருக்கின்றனவா?** இல்லை. ஒரு படகு இந்தக் கரையில் இருக்கின்றது. இரண்டு படகுகள் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு அக்கரையை நோக்கிப் போகின்றன. ஒன்று பாலத்தின் ஒரு கண் வழியாக அப்பாற் போகின்றது.

4. **பாலத்தில் உள்ள கண்கள் எத்தனை?** பாலத்தில் இருப்பவை எட்டுக் கண்கள்.

5. **அக்கண்கள் இருப்பதால், நன்மை என்ன?** அவை இருப்பதால், அவற்றின் வழியாக ஆற்று நீர் பாலத்துக்கு அப்பாற் போகின்றது. அவை இல்லாவிடில், ஆற்று நீர் பாலம் வரையில் தேங்கிப் பக்கத்து ஊர்களை அழித்துவிடும்.

6. படித்துறை எதற்காக ஏற்பட்டு இருக்கிறது? ஜனங்கள் குளத்தில் சௌகரியமாக இறங்கிக் குளிப்பதற்குப் படித்துறை ஏற்பட்டு இருக்கிறது.

7. **படித்துறைக்கு** எதிரில் கோயில் இருக்கக் காரணம் என்ன ?

8. **ஜனங்கள்** குளத்தில்குளித்தவுடனே, கடவுளைத் தரிசனம் செய்வதற்காக இந்தக் கோயில், படித்துறைக்கு எதிரில் கட்டப்பட்டு இருக்கிறது. இப்படிக் கட்டப்பட்ட கோயில்கள் பலவற்றை நமது நாட்டில் ஆற்றங்கரையில் பார்க்கலாம்.



24. மாதங்கள்

தாயார் :—கோபாலா, இன்று என்ன கிழமை?

கோபாலன் :—அம்மா! இன்று வெள்ளிக் கிழமை.

தாயார் :—நான் கிழமைகளைப்பற்றி நேற்றுச் சொன்னது நினைவில் இருக்கிறதா?

கோபாலன் :—ஆம், அம்மா! நினைவில் இருக்கிறது. கிழமை ஏழு என்று சொன்னீர்கள்.

தாயார் :—என் செல்வமே, நீ கூறினது சரி; ஏழு கிழமைகளின் பெயர்களைக் கூறு.

கோபாலன் :—ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி.

தாயார் :—தம்பி, இந்த ஏழு நாட்கள் கொண்டது ஒரு வாரம். நான்கு வாரங்கள் கொண்டது ஒரு மாதம் எனப்படும். பன்னிரண்டு மாதங்கள் கொண்டது ஒரு வருஷம் ஆகும்.

கமலம் :—அம்மா, பன்னிரண்டு மாதங்களின் பெயர்களைச் சொல்லுங்கள்.

தாயார் :—குழந்தைகளே, நான் முதலில் தமிழ் மாதப் பெயர்களையும், பின்பு ஆங்கில மாதப் பெயர்களையும் கூறுகிறேன்.

தமிழ்மாதப் பெயர்கள்	ஆங்கிலமாதப் பெயர்கள்
சித்திரை	ஜனவரி
வைகாசி	பிப்பிரவரி
ஆனி	மார்ச்சு
ஆடி	ஏப்பிரல்
ஆவணி	மே
புரட்டாசி	ஜூன்
ஐப்பசி	ஜூலை
கார்த்திகை	ஆகஸ்டு
மார்கழி	செப்டம்பர்
தை	அக்டோபர்
மாசி	நவம்பர்
பங்குனி	டிசம்பர்

25. விண் மீன்

1. **வா**னில் ஒளிவிடும் விண்மீனே !
ஆ! ஆ! ஆ! உன் அழகென்னே!
வானத் தில் நீ இருக்கின்ருய்;
வைரத் தைப்போல் ஒளிர்கின்ருய்.

2. சூரியன் மறைந்தான்; இருள் எங்கும்
சூழ்ந்து விட்டது; பொறுக்காமல்
சடுக்கென வந்தாய்; ஒளிவிட்டாய்;
சுடர்போல் விளங்கிடும் விண்மீனே !

3. இருளில் நாங்கள் வருந்தாமல்
வெளிச்சம் தந்திடும் விண்மீனே !
இறைவன் உன்னைப் படைத்ததேன் ?
எமக்கு வெளிச்சம் தந்திடவே.

4, இருளில் சென்றிடும் வழிப்போக்கன்
திருந்தி நடப்பதும் உன்ஒளியால்
இறகு எனக்கு இருந்தாக்கால்,
வந்திடு வேன்உன் பக்கத்தில்.



26. போலீஸ் சேவகர்

1. நீ இந்தப் படத்தில் என்ன பார்க்கிருய்? நான் ஒரு சாலையைப் பார்க்கிறேன். நான் பெரிய கட்டடங்களையும் பார்க்கிறேன்.

2. சாலையின் நடுவில் நிற்பவன் யாவன்? அவன் ஒரு **போலீஸ் சேவகன்**.

3. அவன் என்ன செய்கிருன் ? அவன் தனது வலக்கையால் எதிரில் உள்ள வண்டியைப் போகும்படி செய்கிருன்.

4. அவனது இடக்கை என்ன செய்கிறது? அவன் தனது இடக்கையை நீட்டிப் பின்னல் வந்த வண்டியை நிறுத்தினுன். சாலையில் அந்த வண்டி போக இடம் ஏற்பட்டதும் அதைப் போகச் செய்வான்.

5. அவன் ஏன் இப்படிச் செய்யவேண்டும்? அவன் இப்படிச் செய்யா விட்டால், நாலா பக்கங்களிலும் இருந்துவரும் வண்டிகள் அவசரத்தில் ஒன்ரோடு ஒன்று மோதிக் கொள்ளும்; வழிப்போக்கர்களுக்கு ஆபத்து ஏற்படும்.

6. குதிரைமேல் இருப்பவன் யாவன்? அவன் ஓர் ஆங்கிலப் போலீஸ் வீரன். அவனைச் **சார்ஜண்டு** என்பர். அவனும் போக்கு

வரவைக் கவனிக்கும் சேவகன். அவன் சாலை ஓரங்களில் சிலர் கடைகள் வைக்காதபடியும், சாமான்களை விற்காதபடியும், ஜனங்கள் ஒழுங்காகப் போகும்படியும் பார்த்து வருவான்.

7. எல்லா ஊர்களிலும் இப்படிப் போலீஸ் சேவகர் நின்று போக்கு வரவைக் கவனிக்கின்றனரா? இல்லை, இல்லை. பெரிய நகரங்களில்தான் இப்படிக் கவனிக்கிறார்கள்.

8. சாலையில் நான் எந்தப் பக்கம் நடக்க வேண்டும்? சாலையில் நீ **இடது பக்கம்** நடக்க வேண்டும். வண்டிகள் போய்க்கொண்டு இருக்கும்போது, நீ சாலையின் குறுக்கே நடக்கக் கூடாது; ஓடவும் கூடாது.



27. உனது வீடு

1. குழந்தாய், கீற்று வீடாயினும், சிறிய குடிசை ஆனாலும், நீ வாழ்கின்ற வீடு சுத்தமாக இருக்க வேண்டும். போதுமான வெளிச்சமும் காற்றும் வரத்தக்க பெரிய சாளரங்கள் அவ்வீட்டில் அமைந்து இருக்கவேண்டும். வீட்டுக்குப் பக்கத்தில் அசுத்தங்கள் இருக்கக் கூடாது.

2. வீட்டுக் கூரையில் இருந்து மழை நீர் உள்ளே விழாதபடி கூரை அமைந்து இருக்க வேண்டும். புகைக்கூண்டுகள் அமைந்த சமையல் அறை இருப்பது நல்லது. சமையல் அறை

யில் நல்ல காற்றும் வெளிச்சமும்தரத் தக்க ஜன்னல்கள் இருப்பது நலம்,

3. **வீட்டுச்** சுவர்களையும் தரையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். சுவர்கள் எப்போதும் சுத்தமான வெண்மை நிறத்தோடு இருப்பது அவசியம். அவற்றின்மீது கிறுக்கக்கூடாது. வருஷத்துக்கு இரு முறை வெள்ளை அடிக்க வேண்டும்.

4. தினந்தோறும் தரையை மும்முறை பெருக்கிச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். வாரந்தோறும் செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் தரையைச் சாணமிட்டு மெழுக வேண்டும். வீட்டில் கண்ட இடங்களில் எச்சில் உமிழ்தல், தண்ணீர் தெளித்தல் குப்பையைச் சேர்த்துவைத்தல் தவருகும். குப்பை கூளங்களைத் தகரத் தொட்டி ஒன்றில் போட வேண்டும்.

5. **வீட்டுச்** சாமான்களைச் சுத்தமாயும், அது அது இருக்க வேண்டும். இடத்திலும் வைத்திருக்க வேண்டும். கூரையில் படியும் ஒட்டறைகளை அடிக்கடி எடுத்துக் கூரையைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

6. **குழந்தாய்** உனது வீடு இப்படிச் சுத்தமாய் இருப்பின், நீ நோய் இல்லாமல் சுகமாக வாழலாம்.

28. எதையும் யோசித்துச் செய்

1. "ஆ! நான் எனது பெரியவீட்டில் தனியாக இருக்கிறேன். எனது வீட்டைச் சுற்றிலும் பெரிய தோட்டம் ஒன்று இருக்கிறது. நீ என்னோடு வந்து எனது வீட்டில் இருக்க விரும்புகிறாயா? நாம் இருவரும் நண்பராக இருப்போம்" என்றான் **குடியானவன்.**

2. "ஆஹா! நான் உன்னோடு வரத் தடையில்லை" என்றது **கரடி.**

3. அன்று முதல் குடியானவன் கரடியோடு தோட்டத்தில் வேலை செய்துவந்தான். குடியானவன் ஒரு நாள் மாலை தோட்டத்தில் இருந்த பெரிய கல்லின்மீது படுத்தான்; களைப்பால் உடனே தூங்கிவிட்டான். கரடி அவனுக்கு எதிரில் உட்கார்ந்துகொண்டு இருந்தது.

4. அப்பொழுது தோட்டத்தில் இருந்த ஈக்கள். குடியானவன் முகத்தின்மேல் வந்து உட்கார்ந்தன. குடியானவன் இரண்டு முறை அவற்றை ஓட்டினான். ஈக்கள் அவன்முகத்தை விட்டு அகலவில்லை. அவன் களைப்பால் அயர்ந்து தூங்கினான்.

5. கரடி, "என் நண்பன் அயர்ந்து தூங்குகிறுன். இந்த ஈக்கள் அவனது தூக்கத்தைக் கெடுத்துவிடும். இவை அவனது வாய் மீது மொய்த்துக்கொண்டு இருக்கின்றன. இவற்றை ஒரே அடியில் ஒழித்துவிடுவேன்" என்று தனக்குள் கூறிக்கொண்டது.

6. கரடி ஒரு கல்லைக் கையில் எடுத்தது; குடியானவன் வாய்மீது மொய்த்துக்கொண்டிருந்த ஈக்களைப் பார்த்து ஓங்கி அடித்தது. அவ்வளவே: குடியானவன் 'ஓ' என்று அலறிக்கொண்டு எழுந்தான். பாவம்! அவனுடைய இரண்டு பற்கள் கீழே விழுந்தன. வாயிலிருந்து இரத்தம் ஒழுகிற்று.

7. குடியானவனுக்கு அப்பொழுதுதான் தான் செய்த தவறு தெரிந்தது. ஒரு கரடியை நண்பனுகக் கொண்டது பெருந்தவறு என்பதை அவன் உணர்ந்தான். எதையும் யோசித்துச் செய்யவேண்டும் என்பதை அறிந்து கொண்டான்.



29. டிக்—டிக்—டிக்

1. டிக்-டிக்-டிக்....என்று நான் ஓயாமல் வேலை செய்துகொண்டே இருக்கிறேன். என்னைப் பார்த்தும் சில பிள்ளைகட்குப் புத்தி வருவது இல்லை. நான் ஓயாமல் வேலை செய்வதைப் போல ஏன் அவர்களும் வேலை செய்யக் கூடாது?

2. என் எஜமானர் எனக்கு ஒரு நாளைக்கு ஒரு வேளை அன்னம் (சாவி) இடுகிறார். அப்படி இட்டும் நான் எவ்வளவு நன்றாக வேலை செய்கிறேன்? ஆனால், தினம் மூன்று நான்கு முறை சாப்பிடும் பிள்ளைகள் தங்கள் பாடங்களை ஒழுங்காகப் படிப்பதே இல்லை.

3. என் எஜமானர் குறித்த நேரம் தவறி எனக்கு அன்னம் (சாவி) இடுவதும் உண்டு.

அப்படி இட்டாலும், அதற்காக நான் கோபிப்பதே இல்லை. நான் பொறுமையோடு வேலை செய்து வருகிறேன். ஆனால், பிள்ளைகள் சாப்பாடு தயாராகச் சிறிது நேரம் ஆனாலும், தாயாரைத் துன்புறுத்திவிடுகிறார்கள்; அழ ஆரம்பிக்கிறார்கள்; பாடங்களைப் படிப்பதில்லை. பள்ளிக்கூடம் போவதில்லை, இத்தகைய மூடப் பிள்ளைகளைப் பார்க்க எனக்கு உண்மையில் சிரிப்பு உண்டாகிறது.

4. **நா**ன் ஒரு நாளாவது என் வேலையில் இருந்து தவறுவதே இல்லை. என்னைப் போலப் பிள்ளைகளாகிய நீங்கள் தினந்தோறும் உங்கள் பாடங்களை நன்றாய்ப் படித்து வாருங்கள்; கணக்குகளைப் போடுங்கள்; பள்ளிக்கூடம் செல்லுங்கள்; பெற்றோர் சொற்படி நடவுங்கள்; கடவுளைப் பிரார்த்தனை செய்யுங்கள். மேன்மை அடைவீர்கள்........ டிக்—டிக்—டிக்.

1. **அ**றுபது விநாடி ஒரு நிமிடம்;
அறுபது நிமிடம் ஒரு மணியாம்;

2. **ஆ**றினை நான்கால் பெருக்கிடுவாய்;
வருவது ஒருநாள் மணியாகும்.

3. **வி**நாடியை வீணாய்க் கழிக்காதே;
விநாடியும் வேலைசெய் விருப்போடே.

4. **கா**லம் என்பது உயிர் ஆகும்;
காலம் கழியின் உயிர் கழியும்.

30. எனது அருமை நாய்

1. **கண்ணன்** என்பது நாயின் பெயர்;
கண்மணி என்பது என்றன் பெயர்;

2. **க**ண்ணன் என்னை விரும்புகிறான்;
கண்மணி நானும் விரும்புகிறேன்.

3. **க**ண்ணன் கடைக்குப் போய்வருவான்;
கருத்தாய்ச் சொன்னதைச் செய்திடு
வான்;

4. **எ**ன்னைக் காலையில் எழுப்பிடுவான்;
என்னுடன் உலவ வந்திடுவான்;

5. **கு**ட்டிக் கரணம் போட்டிடுவான்;
குழைத்து வாலை ஆட்டிடுவான்.

6. **பட**ம் நான் பார்க்கும் போதெல்லாம்;
படங்களை அவனும் பார்த்திடுவான்.

7. **ஒ**ருநாள் கண்ணன் என்னுடனே;
ஒழுங்காய்ப் பள்ளிக் கூடம்வந்தான்.

8. **வ**குப்பிற் குள் நான் போய்விட்டேன்;
வெளியில் கண்ணன் நின்றிட்டான்.

9. ‘**நா**யும் படிக்க வந்ததுவோ?’
என்றே மாணவர் நகைத்தனரே.

10. **க**ண்ணனை விரட்ட முயன்றனரே;
கண்ணனோ போவான் என்னைவிட்டே?

11. **நா**ன்வரும் வரையில் நின்றிருந்தான் ;
நான்வந்ததும் என் னுடன்வந்தான்.

12. **க**ண்டே மாணவர் கூறினரே ;
ஆ ! ஆ ! கண்ணன் அறிவென்னே !

13. **க**ண்மணி யுடனே இங்குவந்தான் ;
கண்மணி பொருட்டுக் காத்திருந்தான்.

14. **க**ண்மணி யுடனே போவதைப்பார் ;
கண்ணன் அறிவினை எண்ணிப்பார்.

15. **க**ண்ணனைப் போல்ஒரு நாய்வேண்டும் ;
நாயே நல்ல துணையாகும்.

---

31. சுத்தமான கிராமம்

கண்ணன்:—மாமா, உங்கள் கிராமத்தில் எல்லோரும் சுகமாய் இருக்கிறார்களே! எங்கள் கிராமத்தில் பலர் ஜுரம் முதலிய நோய்களால் துன்பப்படுகிறார்களே! இரண்டுக்கும் காரணம் என்ன?

மாமன்:—கண்ணா, எங்கள் கிராமத்தில் குப்பை கூளங்கள் இல்லை. குப்பை கூளங்கள் இருப்பின், ஈக்கள் மொய்க்கும். அந்த ஈக்களால் நோய் உண்டாகும்.

கண்ணன்:—நீங்கள் குப்பை கூளங்களை என்ன செய்கிறீர்கள்?

மாமன்:—நாங்கள் பூமியில் பெரிய குழிகள் தோண்டி, அவற்றுள் குப்பை கூளங்களைப் புதைத்து விடுகிறோம். அதனால் எங்கள் கிராமத்தில் ஈக்கள் இல்லை. எங்கள் கிராமம் எப்பொழுதும் சுத்தமாய் இருக்கின்றது.

கண்ணன்:—ஓ, அப்படியா! எங்கள் கிராமத்தார் அவ்வாறு செய்வதில்லை; குப்பை

கூளங்களைத் தெருக்களில் போட்டு விடுகின்றனர். அவற்றில் ஈக்கள் மொய்த்துக்கொண்டு இருக்கும். நீங்கள் உங்கள் கிராமத்தில் செய்கின்ற வேலையை நான் அவர்களுக்குக் கூறுவேன்; அவர்களையும் நோய் இல்லாமல் சுகமாக இருக்கச் செய்வேன்.

மாமன் :—கண்ணு, அதுதான் நல்லது. **எந்தக் கிராமம் சுத்தமாய் இருக்கிறதோ, அந்தக் கிராமத்தில் நோய்கள் இரா.** யாவரும் சுகமாய் இருப்பர்.

32. கை அளவே வேறுபாடு

1. தடித்த மனிதர் ஒருவர் ஒரு நாள் புகை வண்டி ஒன்றில் பிரயாணம் செய்தார். வண்டி ஒரு புகை வண்டி நிலையத்தில் நின்றது. அவர் ஏறி இருந்த வண்டியில் ஓர் எளிய மனிதன் ஏறினன்.

2. அவன் கிழிந்த ஆடையை இடுப்பில் கட்டி இருந்தான்; உடம்பின்மேல் ஒரு கிழிந்த துணியைப் போர்த்திருந்தான். அவன் தடித்த மனிதர் பக்கத்தில் உட்கார்ந்தான். அவனுக்கும் அவருக்கும் நடுவில் **கை அளவு** இடமே காலியாய் இருந்தது.

3. அவ்வேழை மனிதன் தம் பக்கத்தில் உட்கார்ந்தது அவருக்குப் பிடிக்க வில்லை. அவர் கனைத்தார்; உறுமினர்; மீசையை முறுக்கினர். வண்டி போய்க்கொண்டே இருந்தது.

4. பெரிய உடம்பினர் அவனைக் கோபமாக நோக்கி, "உனக்கும் கழுதைக்கும் என்ன வேறுபாடு ?" என்று உறுமினர். அவன் நகைத்துக் கொண்டே, "அதிகம் இல்லை. கை அளவே வேறுபாடு," என்ருன். பெரியவர் வாயைத் திறக்கவே இல்லை. குழந்தாய் ஏழை கூறியதின் பொருள் என்ன?

33. சுத்தம் சுகத்தைத் தரும்

தாயார்:—தம்பீ, நீ எதிர் வீட்டு ஏகாம்பரத்துடன் சேராதே.

மகன்:—ஏன் ? அம்மா! அப்படிச் சொல்லுகிறீர்கள் ?

தாயார்:—குழந்தாய், அவன் தினந்தோறும் குளிப்பதில்லை.

மகன்:—இது ஒரு குற்றமா?

தாயார்:—மகனே, இது பெரிய குற்றம் ஆகும். நீ ஒரு நாள் குளிக்காமல் இருப்பின், உனது உடம்பில் வியர்வை தேங்கி, நாற்றம் உண்டாகும்; சோம்பல் உண்டாகும்; பலதரம் கொட்டாவி விட்டுக்கொண்டே இருப்பாய்.

மகன்:—தினந்தோறும் குளிப்பதால் என்ன நன்மை உண்டாகும்?

தாயார்:—தினந்தோறும் குளிப்பதால் உடம்பில் உள்ள அழுக்குப் போகின்றது; உடம்பு சுத்தமாகிறது; சுறுசுறுப்பு உண்டாகிறது; நீ உன் வேலைகளை நன்றாகச் செய்ய முடியும்.

மகன்:—அம்மா, ஏகாம்பரத்தின் மீது வேறு தவறு ஏதேனும் உண்டோ?

தாயார் :—ஆம்; அவன் எப்போதும் நகங்களைத் தன் பல்லால் கடித்துக்கொண்டே இருக்கிறான்.

மகன் ;—அம்மா, அது ஒரு தவருகுமா ?

தாயார் :—குழந்தாய், நகத்தில் பலவிதமான அழுக்குச் சேர்ந்து விடும். அதை அவன் கடிக்கும்போது அதில் உள்ள அழுக்கு அவன் வாய்க்குள் போகும் அல்லவா? அதனுல் பலவித நோய்கள் உண்டாகும். நாளடைவில் உடம்பு கெட்டுவிடும்.

மகன் :—நகம் வளர்ந்தால் என்ன செய்வது ?

தாயார் :—கத்தியால் நகத்தைச் சீவிவிட வேண்டும். அப்போது நகத்தில் அழுக்குப் படியாது. **சுத்தம் சுகத்தை தரும்.** சுத்தம் இல்லாவிடில் சுகம் ஏது ?



34. என் உறுப்புகள்

1. குழந்தாய், என்னைப் படத்தில் பார். நீ என் உறுப்புகளை உற்றுப் பார். **வேர், அடிமரம், கிளை, மிலாறு, இலை, பூ, பிஞ்சு** முதலியன என் உறுப்புகள் ஆகும்.

2. **நான்** நிற்பதற்கும் வளர்வதற்கும் முக்கிய ஆதாரமாய் இருப்பது **வேர்**. வேர்கள், நான் கீழே விழாதபடி என்னை இழுத்துப் பிடித்துக்கொண்டு இருக்கின்றன. அவையே எனக்கு வேண்டும் ஆகாரத்தை பூமிக்குள் இருந்து தருகின்றன.

3. **வேர்களுக்கு** மேலே இருக்கின்ற பருத்த பாகம் **அடி மரம்** என்பது. அது தனக்கு மேலே உள்ள கிளை முதலிய என் உறுப்புகளைத் தாங்கிக்கொண்டு இருக்கிறது. அதன் உட்புற மாகவே எனக்கு வேண்டும் உணவை வேர்கள் அனுப்புகின்றன.

4. அடி மரத்துக்கு மேல் உள்ள கிளை களைக் கவனி. கிளைகளில் இருந்து மிலாறுகள் பிரிகின்றன. அவற்றில் இலைகள் இருக்கின்றன அல்லவா?

5. **இலைகளே** எனக்கு மிகவும் முக்கியமா னவை. அவை, நீ விடும் கெட்ட காற்றை வாங்கிக்கொண்டு, உனக்கு நல்ல காற்றைத் தருகின்றன. அவை உனக்குச் செய்கின்ற இந்த உதவிக்கு நீ என்ன பதில் உதவி செய்யப் போகிறாய்?

6. **எனக்கு** அழகைத் தருவது பூ, அதன் மீது எனக்கு விருப்பம் அதிகம் உண்டு. சில மலர்கள் வாசனையோடு இருக்கும். சில வாசனை இல்லாமல் இருக்கும். என் பூவோ, வாசனை உடையது.

7. **பூவில்** இருந்து தோன்றுவது பிஞ்சு. அது முற்றிக் காயாகும். காய் முற்றிப் பழம் ஆகும். நீ ஒரு பழத்தைத் தின்ன விரும்பு கிறாயா?



35. அலைகள் எதனை அறிவிக்கின்றன

1. சுருண்டு சுருண்டு கரையினை மோதிடும்
சோதி மயமான அலைகளே ;
மருண்டு பழைய இடத்தை அடைவதேன்
மறைவேன்? கூறுங்கள் காரணத்தை.

2. தாவித் தாவிவரும் அலைகளே! நீவிர்
தாண்டுவதில்லை கரைக்கப்பால்;
மேவி யெனக்கொரு மாற்றம் உரையீரோ
மாபெரும் அலைகளே! வாய்திறந்து?

3. "தாண்டக் கூடாதே"ன்றுதரங்கங்கள்கூவி
நிலத்துக்கும் நீருக்கும் எல்லையாக [டும்
ஆண்டவன் இட்ட கரையினைத் தாண்டுதல்
ஆகாது தம்பீ! ஆகாது.

4. "அலைகள் கரையினைத் தாண்டுதல் கூடாது;
அப்படியே நீயும் ஆசிரியர்
அமைத்த விதிகளை மீறுதல் கூடாது;
அன்புடைத் தம்பீ, அறிந்துகொள்க".



36. கிராமக் குளங்கள்

சுந்தரி சென்னையில் இருந்து தன் அக்காள் இருக்கும் கிராமத்தை அடைந்தாள். அவளுக்குக் கிராமத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது. அவள் ஒரு நாள் தன் அக்காளுடன் குளத்துக்குப் போனாள். அங்கு அவளும் அவள் அக்காளும் கீழ் வருமாறு பேசிக் கொண்டனர்.

சுந்தரி:—அக்கா, இக்குளத்துக் கரையில் நிற்கும் இவர் யார்?

அக்காள்:—சுந்தரி, இவர் குளத்துக்காவற்காரர்.

சுந்தரி:—என்ன! இக்குளத்துக் காவற்காரரா? இதற்குக் காவல் எதற்கு?

அக்காள்:—நாங்கள் இக்குளத்து நீரைக் குடிப்பதற்கு உபயோகிக்கிறோம். அதனால், இதில் எவரும் குளித்தல் கூடாது; ஆடு மாடு களைக் குளிப்பாட்டக் கூடாது. இவை நடவாமல் பார்த்துக்கொள்ளவே இவர் நியமிக்கப் பட்டிருக்கின்றார்.

சுந்தரி:—அக்கா, இதில் குளிக்கக் கூடாது என்றால், நாம் குளிப்பதற்கு வேறு குளம் வேண்டுமே! அதற்கு என்ன செய்வது?

அக்காள்.—நாம் குளிப்பதற்காகத் தெருக் கோடியில் வேறு குளம் ஒன்று இருக்கின்றது. ஆடுமாடுகளை நீராட்ட வேறொரு குளமும் இருக்கிறது.

சுந்தரி:—எல்லாவற்றிலும் ஒரே குளம் இருந்தால் கெடுதல் என்ன ?

அக்காள்;—சுந்தரி, உடம்பில் உள்ள அழுக்கைத் தேய்த்துக் குளிக்கும் குளத்து நீர் அழுக்குடையது. அதனை நாம் குடிக்கலாமா? அதனால் நமக்குப் பலவித நோய்கள் உண்டாகுமே! மேலும் ஆடு மாடுகளை நீராட்டும் குளத்தில் உள்ள நீரை நாம் பருகலாகாது. அதனால்தான் ஒவ்வொன்றுக்கும் தனித் தனியே குளம் தோண்டப்பட்டு இருக்கிறது.

சுந்தரி:—அக்கா, இது நல்ல முறைதான். ஒவ்வொரு கிராமத்திலும் இம்முறைப்படி தனித்தனியே குளங்கள் இருப்பின், கிராம வாசிகள் நோயின்றிச் சுகமாக வாழ முடியும் அல்லவா ?

37. உலக நீதி

1. ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டா.
2. ஒருவரையும்பொல்லாங்குசொல்லவேண்டா.
3. மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டா.
4. வஞ்சனைகள்செய்வாரோடுஇணங்கவேண்டா
5. நெஞ்சாரப்பொய்தன்னைச்சொல்லவேண்டா.
6. நஞ்சுடனே ஒருநாளும் பழகவேண்டா.
7. அஞ்சாமல் தனிவழியே போகவேண்டா.
8. அடுத்தவரை ஒருநாளும் கெடுக்கவேண்டா.
9. தனந்தேடி உண்ணாமல் புதைக்க வேண்டா.
10. தருமத்தை ஒருநாளும் மறக்கவேண்டா.
11. குற்றம் ஒன்றும் பாராட்டித் திரியவேண்டா.
12. கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டா.
13. கொலைகளவு செய்வாரோடு இணங்க வேண்டா.
14. கோயில்இல்லாஊரில்குடி இருக்கவேண்டா.
15. மூத்தோர்சொல் வார்த்தைதனை மறக்க வேண்டா.
16. முன்கோபக் காரரோடு இணங்க வேண்டா.
17. இறந்தாலும் பொய்தன்னைச் சொல்ல வேண்டா.
18. எளியாரை எதிரிட்டுக் கொள்ள வேண்டா.
19. செய்தநன்றி ஒருநாளும் மறக்க வேண்டா.
20. தெய்வத்தை ஒருநாளும் மறக்க வேண்டா.



38. நெசவுத் தொழில்

1. குழந்தாய், இந்தப் படத்தைப் பார். இதில் ஒரு பெண் இராட்டினத்தில் நூல் நூற்கிருள். அவள் தனது இடக் கையில் பஞ்சைப் பிடித்துக்கொண்டு வலக் கையால் சக்கரத்தைச் சுற்றி நூல் நூற்கிருள்.

2. பருத்திச் செடி நமது நாட்டில் பல இடங்களில் பயிராகின்றது. பருத்திக் காய்கள் முற்றியப் பிறகு வெடிக்கும். அப்போது அவற்றில் இருந்து பஞ்சு வெளிப்படும். அந்தப் பஞ்சே நூல் நூற்றுத் துணி நெய்ய உதவுகிறது.

3. துணி நெய்பவர் கொட்டைகளை எடுத்துவிட்டுப் பஞ்சைச் சுத்தம் செய்வர்; பிறகு அதை நூலாக நூற்பர்; பின்னர், நூற்ற நூலைத் தறியில் இட்டுத் துணியாக நெய்வர். படத்தைப்பார். ஒருவர் தறியில் துணி நெய்துகொண்டு இருக்கிறார்.

4. நமது நாட்டில் துணிநெய்பவர், தறியில் துணி நெய்கின்றனர். மேல் நாடுகளில் இருப்பவர் யந்திரங்களின் உதவியைக் கொண்டு துணி நெய்கின்றனர். ஆயினும், கைத்தறியில் நெய்யப்படும் துணியே உறுதி உடையது. நாம் அதை வாங்கி உடுப்பதே நல்லது.

5. துணி நெய்வோர், நூலுக்கு வேண்டும் சாயத்தை ஏற்றி, விதவிதமான துணிகளை நெய்கின்றனர். அதனால், நமக்குப் பல நிறங்களிலும் ஆடைகள் கிடைக்கின்றன.

6. நெசவுத் தொழில் உயர்ந்த தொழில். அதை ஒவ்வொரு கிராமவாசியும் செய்வது நல்லது. அவரவர் தமக்கு வேண்டும் ஆடைகளைத் தாமே நெய்துகொள்ளலாம்.

39. பிறருக்கு உதவவே பிறந்துள்ளோம்

1. 'உதவி! உதவி!' என்று எவரேனும் கூவினுற் போதும்.உடனே முருகன் ஓடுவான் அவன் எவருக்கும் உதவி செய்யத் தவறுவதே இல்லை. ஆனல், முகுந்தனே, முருகேசனுக்கு நேர் மாருனவன் அவன், 'நான் ஏன் பிறர்க்கு உதவி செய்யவேண்டும்?' என்று கேட்பான்.

2. ஒருநாள் முருகனும் முகுந்தனும் பள்ளிக்கூடத்தில் இருந்து வந்துகொண்டு இருந்தனர். வழியில் ஒரு சிறுவன் 'அம்மா! என்று கூவி அழுதுகொண்டு இருந்தான். அச் சிறுவனேக்கண்ட முகுந்தன், "இச்சிறுவனுக்கு நான் ஏன் உதவிசெய்ய வேண்டும்? இவன் என் தம்பி அல்லவே! என்று சொல்லிப் போனன்.

3. ஆனல், முருகன் அப்படிச் சொல்ல வில்லே. அவன் சிறுவனிடம் ஓடினன்; அவனேத் தோள்மீது தூக்கிக்கொண்டான்; தெருவழியே நடந்து சென்றுன். அப்பொழுது ஒரு பெண் பிள்ளே அழுதுகொண்டே தெருவில் ஓடி வந்தாள். அவளேச் சுற்றிப் பலர் வந்தனர்.

4. அவள் முருகனைக் கண்டாள்; அவன் தோள்மீது சாய்ந்துகொண்டு இருந்த தன் சிறுவனைக் கண்டாள்; 'ஆ! செல்வமே, உன்னைத் தேடியே அலைகின்றேன்,' என்று கூறிக் கொண்டே சிறுவனைத் தூக்கி, மார்போடு அணைத்துக் கொண்டாள். சிறுவனும் அழுகையை நிறுத்தித் தாயின் கழுத்தை இறுகக் கட்டிக்கொண்டான்.

5. சிறுவன் தாய் முருகனை வாழ்த்தினாள். அப்போது முருகன், 'அம்மா, நான் பெரிய உதவி ஒன்றும் செய்துவிடவில்லையே! ஒருவருக்கு ஒருவர் உதவி செய்துகொள்ளவே நாம் உலகில் பிறந்து இருக்கிறோம். பிறர் உதவி இல்லாமல் ஒருவரும் வாழ முடியாது. நான் செய்த உதவியைப் பாராட்ட வேண்டா,' என்று கூறிச் சென்றான், அங்கு இருந்த யாவரும் முருகனை வாழ்த்தினர்.

தம்பீ, முருகன் நல்லவனா, முகுந்தன் நல்லவனா?



40. கடவுள் வணக்கம்

1. அப்பா! எம்மைக் காத்திடுவீர்;
அன்போ டெம்மை அணைத்திடுவீர்.

2. எத்தொழில் செயினும் உமைமறவோம்;
எல்லாம் நீரே என்றறிவோம்.

3. நல்லன செய்வோம்; நல்லரைச் சேர்வோம்;
அல்லன ஒழிப்போம் அறிந்திடுவீர்.

4. மூன்றாம் வகுப்பை அடைகின்றோம்;
அங்கும் எம்மைக் காத்திடுவீர்.

5. மெய்யெனும் பொருளே! மெய்ப்பொருட் சுவையே!
ஐயா! உம்மை வணங்குகிறோமே.

The B. N. Press, Mount Road, Madras.

Approved by the Madras Text-Book Committee for Class use.

இளங்கோ வாசகம்

மூன்றாம் புத்தகம்

வித்துவான்

மா. இராசமாணிக்கம்



V. K. அருணாசலம்

தெப்பக்குளம் :: திருச்சி.

எம் சொந்தப் பிரசுரங்கள்

		ரூ.	அ.	பை.
1.	இளங்கோ வாசகம், முதற் புத்தகம் ...	0	2	6
2.	,, இரண்டாம் புத்தகம் ...	0	3	0
3.	,, மூன்றும் புத்தகம் ...	0	4	0
4.	,, நான்காம் புத்தகம் ...	0	5	0
5.	,, ஐந்தாம் புத்தகம் ...	0	6	0
6.	இளங்கோ தமிழ் இலக்கணம் ... (ஐந்தாம் வகுப்புக்குரியது)	0	2	6
7.	இளங்கோ எண்சுவடி வாய்பாடு...	0	1	0
8.	புதுமுறை பூகோள சாஸ்திரம் சென்னை இராஜதானி (இது மிகவும் புதிய முறையில் எழுதப் பட்டது. ஐந்தாம் வகுப்புக்குரியது) ...	0	8	0
9.	இந்திய தேச சரித்திரக் கதைகள் ஐந்தாம் வகுப்புக்குரியது ...	0	5	0

V. K. அருணாசலம், தெப்பக்குளம், திருச்சி.